7

உ

கடவுள் துணை

அம்பலவாணக் கவிராயர் இயற்றிய

சதுரகிரி

அறப்பளீசுர சதகம்

பதிப்பாளர்:

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகன் விலாச அச்சுக்கூடம்

சென்னை - 1

1952 [அணா 6

...ராயப்பிள்ளை வீதி.

O-,16MAV,A
N52

102231

உ

கடவுள் துணை

அம்பலவாணக் கவிராயர் பாடிய

சதுரகிரி

அறப்பளீசுர சதகம்

பதிப்பாளர்:

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாஸ அச்சகம்

சென்னை - 1

இதன் விலை] 1952 [அணா 6

நெ. 24. தாண்டவராயப்பிள்ளை வீதி.

உ

சிவமயம்

சதுரகிரி

அறப்பளீசுர சதகம்

காப்பு - வெண்பா

உம்பர்கோன் எம்பெருமான் ஓங்கறப்ப ளீசுரன்மேற்
பைம்பொருள் சேருஞ்சதகம பாடவே—அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளான் அன்புடையார்க் கின்பருளிக்
காச்குந் துதிக்கையுளான் காப்பு.

உயர் பிறப்பு

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

கடலுலகில் வாழும்உயிர் எழுபிறப் பினுள்மிக்க
காட்சிபெறு நரசென்மமாய்க்
கருதப் பிறத்தலரி தினும்உயர் சாதியிற்
கற்புவழி வருதலரிது
வடிவமுடன் அவயவங் குறையாது பிழையது
வருதலது தனினுமரிது
வந்தாலும் இதுபுண்யம் இதுபாவ மென்றெ
மாசில்வழி நிற்றலரிது [ண்ணி
நெடியதன வான் ஆத லரிததின் இரக்கமுள
நெஞ்சினோ னாதலரிது
நேசமுடன் உன்பதத் தன்பனாய் வருதலிந்
நீள்நிலத் ததினுமரிதாம்
அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற
அதிபனெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே. 1

மனையாட்டி சிறப்பு

கணவனுக் கினியளாய் ம்ருதுபாஷி யாய்மிக்க
கமலைநிகர் ரூபவதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோய்பழி யிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்க நாணமடம் அச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமா மர்க்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்புபவளாய்
இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளுமாய்
யெனப்பெய ரிலாதவளுமாய் [* வந்தி
இரதியென வேலைல புரிபவளு மாய்ப்பிறர்தம்
இல்வழி செலாதவளுமாய்
அணியிழையொருத்தியுண் டாயினவள் கற்புடை
ஆகுமெம தருமைமதவேள் [யள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 2

நன்மக்கட் பேறு

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்துவரலுந்
தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
சாதக னெனப்படுதலும்
மங்குத லிலாததன் தந்தைதாய் குருமொழி
மறுதுவழி பாடுசெயலும்
வழிவழி வருந்நமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்காயுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியும்
ஈகையுஞ் சன்மார்க்கமும்

* வந்தி - மலடி.

இவையெலாம் உடையவன் புதல்வனும் அவ
ஈன்றவன் புண்யவானும் [னேயே
* அங்கச விரோதியே சோதியே நீதிசேர்
அரசனெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 3

சகோதரர் ஒருமை

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டுதாந் தேடுபொரு ளவர்தேடு பொருளவர்கொள்
கோதில்புகழ் தம்புகழெனத்
தேடுற்ற அவர்நிந்தை தந்நிந்தை தநதவம்
தீதிலவர் தவமாமெனச்
சிவனென் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்
கூடுற்ற விரையெடுத் தோருடல் நிறைத்திடுங்
கொள்கைபோற் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதருமமாம்
ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே
அண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 4

சற்குரு இயல்பு

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவரவிஞ் ஞானபூர்ண

---

* அங்கசன் - மன்மதன்.

வித்யா விசேஷசற் குணசத்ய சம்பன்ன
வீரவை ராக்யமுக்ய
சாதா ரணப்பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதிநிஷ் டானுபவராய்ச்
* சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
சருமமும் பரசமயமும்
நீதியின் உணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
நிலைகண்டு பாசமிலராய்
நித்தியா னந்தசை தன்யரா யாசையறு
நெறியுளோர் சற்குரவராம்
ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமாம்
§ அமலஎம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 5

நன்மாணுக்கர் இயல்பு

வைதாலும் ஓர்கொடுமை செய்தாலு மோசீறி
மாறு திகழ்ந்தாலுமோ
மனதுசற் றுகிலும் கோணாது நாணாது
மாதா பிதாஎனக்குப்
பொய்யாமல் நீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்துபொரு ளுடலாவியும்
புனிதஉன் தனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில்வீழ்ந்து
மெய்யாக வேபரவி உபதேசம் அதுபெற
விரும்புவோர் சற்சீடராம்
வினைவே ரறும்படி அவர்க்கருள்செய் திடுவதே
மிக்கதே சிகாதுகடன்

* சட்சமயம்-ஆறுவகை மதம். § அமலம்-குற்றமின்மை.

ஐயா * புரம்பொடி படச்செய்த செம்மலே
அண்ணலெம தருமைமதவேல்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 6

பொருள் செயல் வகை

புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளைரட் சிக்கவேண்டும்
புத்தியுடன் அதுஒன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும்
உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்கவேண்டும்
உற்றபெரியோர்கவிஞர் தமர் ‡ ஆதுலர்க்குதவி
ஓங்குபுகழ் தேடவேண்டும்
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டும் உயர்
வழிதேட வேண்டும்அன்றி [மோக்ஷ
வரிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம்
அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரும்
அழகனெம தருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 7

தீவழி விலக்கு

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன நிற்கொணாது
கொஞ்சமே னுந்தீது செய்யொணா தொருவர்மேற்
குற்றஞ்சொ லொண்ணாதயற்

* புரம் - திரிபுரம். ‡ ஆதுலர் - தரித்திரர்.

கோதையர்க ளோடுபரி காசஞ்செயொண் ணது
கோளுரைகள் பேசொணது
நஞ்சுதரும் அரவொடும் பழகொணு திருள்வழி
நடந்துதனி யேகொணது
நதிபெருக் காகின் அதில் நீஞ்சல்செய் யொண்
நல்வழி மறக்கொணது [ணது
அஞ்சாம லரசர்முன் பேசொணு திவையெலாம்
அறியுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 8

ஒன்றற்கு ஒன்று அழகு செய்வன

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வி னுக் கழகுசிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்விகல் விக்கழகு
மாநிலத் துதிசெய்குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடி லதற்கழகுதான்
ஆயதவ மேன்மைஉப காரம்விரதம்பொறுமை
சொல்லரிய பெரியோர்களைத்
தாழ்தல்பணி விடைபுரிதல் சீலநே சங்கருணை
சாற்றுமிவை அழகென்பர்காண்
* சௌரிமல ரோன்அமரர் முனிவர்முச்சுடரெலா
சரணமெமை ரட்சியெனவே [ஞ்
ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே
அண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 9

* சௌரி - விட்டுணு.

ஒன்று இல்லாமையாற் பயன்படாதவை

கோவிலில் லாதவூர் நாசியில் லாமுகங்
கொழுநனில் லாதமடவார்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
குஞ்சர மிலாதசேனை
காவலில் லாதபயிர் பாலரில் லாதமனை
கதிர்மதியி லாதவானம்
கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண்
காவல ரிலாததேசம்
ஈவதில் லாததனம் நியமமில் லாதசெபம்
இசைலவண மில்லாதவூண்
இச்சையில் லாதபெண் போகநல மிவைதம்மி
ஏதுபல னுண்டுகண்டாய் [ன்
ஆவியனை யாட்கிடந் தந்தவா கற்பதரு
ஆகுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 10

ஒன்றற்கு ஒன்று தகாத சேர்க்கை

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளை அரு ளிச்செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத * மிடிவைத்தனை
நீதியகன் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறிமாத ரைத்தந்தனை
நிதானமுள உத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர்வித்தனை
சாதியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்துபா வச்செய்தனை

* மிடி - வறுமை.

தமிழருமை அறியாத புல்லர்மேல் கவிவாணர்
தாம்பாட வேசெய்தனை
ஆதரவி லாமலிப் படிசெய்த தென்சொலாய்
அமலஎம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 11

குணக்கேடர் இயல்பு

மாறுத கலைகற்று நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவனொருபதர்
வாள்பிடித் தெதிரிவரின் ஓடிப் பதுங்கிடும்
மனக்கோழை தானொருபதர்
ஏறு வழக்குரைத் தனைவருஞ் சீசியென்
றிகழநிற் பானொருபதர்
இல்லாள் புறஞ்செலச் சம்மதித் தவளோ
டிணங்கிவாழ் பவனொருபதர்
வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வானொருபதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவு மனையா
விட்டுவிடு வானொருபதர் [ளை
ஆறுத துயரையு மிடியையுந் தீர்த்தருள்செய்
அமலஎம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 12

செயத்தக்கவை

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டுங்கற்ற
வழியிலே நிற்கவேண்டும்
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண் டுந்தே
வளரறஞ் செய்யவேண்டும் [டி

சிலமுடை யோர்களைச் சேரவேண்டும் பிரிதல்
செய்யா திருக்கவேண்டுஞ்
செந்தமிழ்ப்பாடல்பல கொள்ளவேண்டுங்கொ
த்யாகங் கொடுக்கவேண்டும் [ண்டு
ஞாலமிசை பலதரும நாட்டவேண்டும் நாட்டி
நன்றாய் நடத்தவேண்டும்
நம்பன் இணை அடிபூசை பண்ணவேண் டும்ப
ணுலுமிகு பத்திவேண்டும் [ண்ணி
ஆலமமர் கண்டனே பூதியணி * முண்டனே
அனகளம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 13

மேன்மேல் உயர்ச்சி

தன்பட்டி விரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்திய முளபுருடனுஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க
தரணிபுகழ் தருதேவனும்
பொன்மட் டிலாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவிலிந்த்ரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்று
புண்யவா னேபிரமனும்
நன்மைதரு பதினுயி ரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்பவன் செங்கண்மால்
நாளுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகாதேவனும்
§ அன்மட்டு வார்குழலி பாகனே ஏகனே
அண்ணலெம தருமைமதவேள்

---

* முண்டம் - நெற்றி. § அல்-இருள், மட்டு-தேன்.

அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 14

செயற்கு அருஞ்செயல்

நீர்மேல் நடக்கலாம் எட்டியுந் தின்னலாம்
நெருப்பைநீர் போற்செய்யலாம்
நெடியபெருவேங்கையைக் கட்டியேதழுவலாம்
நீளரவி னைப்பூணலாம்
பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறென
பட்சமுடனே உண்ணலாம்
பாணமொடு குண்டு விலகச்செய்ய லாம்மரப்
பாவைபேச பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயும்
எடுக்கலாம் புத்திசற்றும்
இல்லாத மூடர்தம் மனதைத் திருப்பவே
எவருக்கு முடியாதுகாண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவும்
அமலனே அருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே- 15

உத்தம ராவோர்

செய்ந்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
தீமையை மறந்தபேருந்
திரவியந் தரவரினும் ஒருவர்மனை யாட்டிமேற்
சித்தம்வை யாதபேருங்
கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொ
கையிற் கொடுத்தபேருங் [ருளாளர்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
காத்தருள்செய் கின்றபேரும்

பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கிழிவு
புகலாத நிலைகொள்பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்மைஉரை யாதபேரும்
ஐயஇங் கிவரெலாஞ் சற்புருட ரென்றுலகில்
அகமகிழ்வ ருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 16

இதுவுமது

அடைக்கலமெனத்தேடிவருவோர்தமைக்காக்கும்
அவனே மகாபுருடனும்
அஞ்சாம லெதுவரினும் எதுபோகி னுஞ்சித்
அசைவிலான் மகாதீரனும் [தம்
தொடுத்தொன்றுசொன்னசொல் தப்பாதுசெய்கி
தோன்றலே மகாராஜனுந் [ன்ற
றுறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகாமேருவாம்
அடுக்கின்றபேர்க்குவரும் இடர்தீர்த்திரட்சிக்கும்
அவனே மகாத்யாகியாம்
அவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயும்
அவனே மகாஉசிதனும்
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே லோலனே
அமலனே அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 17

ஒன்றிலொன்று இல்லாமை

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மையில்லை

கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணையில்லை
தாமெனு மயக்கமுத் தோங்குபெரி யோர்க்குவரு
ஜாதிகுல மென்பதில்லை
தாக்ஷண்யமுடையபேர்க் கிகலில்லையெங்குமோ
சார்பிலார்க் கிடமதில்லை [ரு
பூமிக்கு வீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தென்றுமில்லை
புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாதோர்
புருடருக் கொன்றுமில்லை
* யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே
அன்புடைய அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 18

யாக்கை நிலையாமை முதலியவை

காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டிலாற் றின்பெருக்காங்
கருணைதரு புதல்வர்கிளை மனைமனைவியிவையெ
கானல்காட் டுப்ரவாகம் [லாங்
மேயபுஜ பலவலுமை யிளமையழ கிவையெலாம்
வெயின்மஞ்ச ளுயிர்தானுமே
வெட்டவெளிதனில்வைத்ததீபமெனவேகருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுட னேதெளிந் தன்பொடுன் பாதத்தின்
நினைவுவைத் திருபோதிலும்
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சி
நிமலனே யருள்புரிகுவாய் [க்க

---

* யாமினி - இராத்திரி.

ஆயுமறி வாளர்பணி பாதனே போதனே
அண்ணலெம தருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 19

திருமங்கை இருப்பிடம்

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மாமனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந்துளவிலே
கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயில்தனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக்கதனிலே
பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர்பாலிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத் தின்சிரசிலே
அற்பெருங் * கோதைமலர் மங்கைவா ழிடமென்பர்
அண்ணலெம தருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 20

மூதேவி இருப்பிடம்

மிதமின்றி அன்னம் புசிப்போ ரிடத்திலும்
மிகுபாவை யோரிடத்தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யேதிரியு
மிக்கபா தகரிடத்தும்

* கோதை - பெண்கூந்தல்.

கதியொன் றுமிலர்போல மலினங்கொளும்பழைய
கந்தை அணி வோரிடத் தும்
கடி நா யெனச்சீறி எவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனையகத் தும்
* ததிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சார்ந்தஆட் டின்திரளிலுஞ்
சாம்பிண முகத்திலும் இவையெலாங் கவலைபுரி
§ தௌவைவாழ் இடமென்பர்காண்
அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரும்
அழகனெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 21

குணுகுணம் இரண்டினும் பயன்படாமை

குணமற்றபேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டுமென்ன
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகிலென்ன
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகிலென்ன
மதுரமில் லாஉவர்க் கடல்நீர் கறுத்தென்ன
மாவெண்மை யாகிலென்ன
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படராது
உலர்ந்துதான் போகிலென்ன
உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
ஒங்குமிடி வரிலென்னகாண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே
ஆதியே யருமைமதவேள்

* ததி - தயிர். § தௌவை - மூதேவி.

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 22

குறைவுற்றுங் குணங் கெடாமை

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால்சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சாரமது ரங்குறையுமோ
நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலுமதின்
நீள்குணம் மழுங்கிவிடுமோ
நெருப்பிடை யுருக்கினும் அடிக்கினுந் தங்கத்
திறைமாற் றுக்குறையுமோ [தின்
* கறைபட்ட பைம்புயல் மறைந்தாலும் அதுகொ
கதிர்மதி கனம்போகுமோ [ண்டு
கற்றபெரி யோர்மகிமை அற்பரறி கிலரேனுங்
காசினி தனிற்போகுமோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
ஐயனே அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 23

இதற்கு உதவிசெய்வது இதுவெனல்

வானவர் பிதிர்க்கள்மூச் சுடர்மூவர் கோள்கட்கும்
வாழ்வுதரும் உதவிபுவனம்
வளமிக்க புவனந் தனக்குமேன் மேலுதவி
வாழ்வுபெற் றிடுமன்னராம்
தேன் அமர் நறுநதொடையல் புனைமன்னவர்க்கு
சோந்தகுடி படைவர்க்கமாஞ் [தவி

* கறை - இருள்.

சேர்குடி படைக்குதவி விளைபயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்குமழையாம்
மேல்நிமிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தம் நீதியொன்று
வேதியரொழுக்கமொன் றிம்மூன் றுமேயென்று
மிக்கபெரி யோருரைசெய்வார்
* ஆன் அமர் நெடுங்கோடி உயர்ந்தஎம் இறைவ
அதிபனே யருமைமதவேள் [னே
அனுதின மு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே. 24

இதனைக்கண்டு மகிழ்வது இதுவெனல்

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் § ருலிப்பது
அவர்தந்த சந்ததியதாம்
சந்ரோ தயங்கண்டு பூரிப்ப துயர்வாவி
தங்குபைங் குமுதமலராம்
புந்திமகிழ் வாயிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்குதா மரைமலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தேநடம்
புரிவது மயூரஇனமாம்
சிந்தைமகிழ் வாயுதவு தாதா வினைக்கண்டு
சீர்பெறுவ திரவலர்குழாம்
திகழ்நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெலாம் என்பர்கண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே
அமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 25

---

* ஆன் - இடபம். § ஆலிப்பது - களிப்பது.

அதுவது ஆகாமை

உள்ளன்பி லாதபேர் தித்திக்க வேபேசி
உறவாடும் உறவும் உறவோ
உபசரித் தன்புடன் பரிமாறி டாதசோ
றுண்டவர்க் கன்னமாமோ
தள்ளா திருந்துகொண் டொருவர்போய்ப் பார்த்
தக்கபயிர் பயிராகுமோ [துவரு
தளகர்த்தன் ஒருவனில் லாமல் முன்சென் றிடுந்
தானையுந் தானையாமோ
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்பமாமோ
வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமு
மிக்கசீ வனமாகுமோ
* அள்ளா திருங்கருணை யாளனே தேவர்தொழும்
ஆதியே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 26

நற்குணங்களுக்கு இடம் ஆகாதவர்

வெறிகொண்ட ‡ மற்கடம் பேய்கொண்டு கள்ளு
வெங்காஞ் சொலிப்புதலிலே [ண்டு
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்கம்எள்ள
மேவுமோ மேவாதுபோல் [ளவு
குறைகின்ற புத்தியா யதிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமையுண்டாய்க்
கொஞ்சமாம் அதிகார முங்கிடைத் தால்மிக்க
குவலயந் தனிலவர்க்கு

* அள்ளாத - குறையாத. ‡ மற்கடம் - குரங்கு.

நிறைகின்ற பத்தியுஞ் சீலமு மேன்மையும்
நிதானமும் பெரியோர்கள்மேல்
நேசமும் ஈகையும் இவையெலாங் கனவிலும்
நினைவிலும் வராதுகண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 27

இதனால்

இன்னமுறையனும் எனல்

தன்னால் முடிக்கவொண் ணாதகாரியம்வந்து
தான்முடிப் போன்தமையனும்
தன்தலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
தாய்தந்தை யென்னலாகும்
ஒன்னார் செயுங்கொடுமை யால்மெலிவு வந்தபோ
துதவுவோன் இட்டதெய்வம்
யுக்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரியம்
உரைப்பவன் குருஎன்னலாம்
எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
எண்ணிவரு வோன்பந்துவாம்
இருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவன்
எவனெனினு மவனேசுதன்
அந் * நார மூப்பணியு மெந்நாளு மேபுனையும்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 28

* நாரம்-கங்கை.

அவரவரிடத்து நடக்குமுறை

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்கனிவு
மாறாத நல்லொழுக்கம்
மருவுகுரு வானவர்க் கினியஉப சாரமுள
வார்த்தைவழி பாடடக்கம்
* காதார் சருங்கண்மனை யாள்தனக் கோசயன
காலத்தில் நயபாஷணங்
கற்றபெரியோர்முதியர் வரும்ஆதுலர்க்கெலாங்
கருணைசே ரருள் § விதானம்
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவிநய
நெறியுடைய பேர்க்கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ் வுடன்பரிவு
நேரல ரிடத்தில்வயிரம்
ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது ஆதமெம
தையனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 29

குணத்தை விட்டுக் குற்றத்தைக் கவர்தல்

துட்டவிக டக்கவியை யாருமே மெச்சுவார்
சொல்லுநற் கவியைமெச்சார்
துர்ச்சனர்க் ககமகிழ்ந் துபசரிப் பார்வருந்
துயரைத் தள்ளிவிடுவார்
இட்டமுள தெய்வந் தனைக்கருதி டார் ¶ கறுப்
பென்னிலோ போய்ப்பணிகுவார்
ஈன்றதாய் தந்தையைச் சற்றுமதி யார்வேசை
என்னிலோ காலில்வீழ்வார்

* காது-கொலை. § விதானம்-வணக்கம்.
¶ கறுப்பு - அற்பதேவதை

நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரில்
நன்ருக வேபேசிடார்
நாளுமொப் பாரியாய் வந்தபுத் துறவுக்கு
நன்மைபல வேசெய்குவார்
அட்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகாண்
அத்தனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 30

குணங்காண் குறி

கற்ருேர்க ளென்பதைச் சீலமுடனே சொலுங்
கனவாக்கி ஞற்காணலாங்
கற்புளா ரென்பதைப் பார்க்கின் றபார்வையொடு
கால்நடையி னுங்காணலாங்
அற்ருேர்க ளென்பதனை ஒன்றிலும் வாரா
அடக்கத்தி ஞல் அறியலாம்
அறமுளோ ரென்பதைப் பூததயை யென்னுநி
அதுகண்டு தான் அறியலாம் [லை
வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினல்
விளையுமென்றே அறியலாம்
வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
விசேடத்தி ஞல் அறியலாம்
அத்தா குணத்திஞற் குலநலந் தெரியலாம்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 31

கூடிற் பயன்படல்

செத்தைபல கூடிபொரு கயிருயின் அதுகொண்டு
திண்கரியை யுங்கட்டலாம்

திகழ்ந்தபல துளிகூடி யாறுயின் வாவியொடு
திரள்வரி நிறைவிக்கலாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்து நூலாயிடின்
உடுத்திடுங் கலையாக்கலாம்
ஓங்கிவரு கோலுடன் சிலையுங் கூடினுல்
உயர்கவிகை யாக்கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி டுமிகூடின்
மல்குமுளை விளைவிக்கலாம்
மனமொத்த நேயமொடு கூடியொருவர்க்கொரு
வாழின்வெகு வெற்றிபெறலாம் [வர்
அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
அமலனே யருளமமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 32

அதததற்கு வெற்றியிடம்

கலைவலா ருக்கதிக சயமதுர வாக்கிலே
காமுகர்க் கதிகசயமோ
கைப்பொருளிலேவரு * மருத்துவர்க்கோசயங்
கைவிசே டந்தன்னிலே
நலமுடைய வேசையர் கழகிலே அரசர்க்கு
நாளும்ரண சூரத்திலே
நற்றவர்க் கதிகசயம் உலகுபுகழ் பொறையிலே
ஞானவே தியர்தமக்கோ
குலமகிமை தன்னிலே வைசியர்க் கோசயங்
கூறியது லாக்கோலிலே
குற்றமில் லாதவே ளாளருக் கோசயங்
குறையாத ‡ கொழுமுனையிலே

* மருத்துவர்-வைத்தியர். ‡ கொழு-காறு.

அலைவில்குதி ரைக்குநடை வேகத்தி லதிகசயம்
ஆமென்ப ரருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 33

ஒன்றனில்லாமையாற் பாழ்படல்

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண
சந்த்ரன் நிகர் முகசூனியம்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர்சூனியம்
மேய்பா டிலாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்கதே சச்சூனியம்
மிக்கசற் புத்திர னிலாததே நலமான
வீடுசேர் க்ருகசூனியம்
சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொலுயர் சபாசூனியம்
தொல்லுலகி லெவர்க்கு மாநிதிய மில்லதே
சுத்தசூ னியமென்பர்காண்
ஆய்பல்வத னத்தனைக் குகனையீன் றருள்செய்த
அத்தனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 34

மூடர் தாரதம்மியம்

பெண்புத்தி கேட்கின்ற மூடரும் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலுமூடரும்
பெரியோர்கள் சபையிலே * முகடேறி வந்தது
பிதற்றிடும் பெருமூடரும்

---

* முகடு - முக்கிய இடம்.

பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே இழிவான
பழிதொழில்செய் திடுமூடரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோ
பாதவித் திடுமூடரும் [ய்ப்
கண்கெட்ட மாடென்ன ஓடியிர வலர்மீது
காய்ந்துவீழ்ந் திடுமூடருங்
கற்றறி விலாதமுழு மூடருக் கிவரெலாங்
கால்மூடர் அரைமூடர்காண்
* அண்கற்ற நாவலர்க் காகவே அதுபோம்
ஐயனே யருமைமதவேள்
அனுதினமு மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 35

இதற்கு இது வேண்டுமெனல்

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
தப்புத்தி கேட்கவேண்டும்
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசேக ரங்கள்வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாகினுந் தன்னினுங்
கற்றோரை நத்தவேண்டும்
காசினியை ஒருகுடையி லாண்டாலும்வாசலிற்
கருத்துள்ள மந்த்ரிவேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகினுஞ்
சுதிகூட்ட ஒருவன்வேண்டுஞ்
சுடர்விளக் காயினு நன்றாய் விளக்கிடத்
தூண்டுகோ லொன்றுவேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
ஐயனே யருமைமதவேள்

---

* அண் - மேன்மை.

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 36

வறுமையின் கொடுமை

மேலான சாதியி லுதித்தாலும் அதிலென்ன
வெகுவித்தை கற்றுமென்ன
மிக்கஅதி ரூபமொடு சற்குண மிருந்தென்ன
மிகுமானி யாகிலென்ன
பாலான மொழியுடைய னாயென்ன ஆசார
பரனு யிருந்துமென்ன
பார்மீது வீரமொடு ஞானவா னாயென்ன
பாக்கிய மிலாதபோது
வாலாய மாய்ப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற் றமுமிகழுமே
மரியாதை யில்லாம லனைவருட பேசுவார்
மனைவியுந் தூறுசொல்வாள்
ஆலால முண்டகனி வாயனே நேயனே
அனகனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 37

ஈனத்துவம்

இரப்பவன் புவிமீதி லீனன்அவ னுக்கில்லை
என்னுமவன் அவனிலீனன்
ஈகின்ற பேர்தம்மை யீயாம லேகலைத்
திடுமுடன் அவனிலீனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
உதவிடான் அவனிலீனன்
உதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலும்
உலுத்தனே அவனிலீனன்

பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொலிப்
    பலகா லலைந் துதிரியப்
  பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
    பாரிலெல் லோர்க்குமீனன்
* அரக்கிதழ்க் குமுதவா யுமைநேச னேஎளியர்
    அமுதனே அருமைமதவேள்
  அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
    அறப்பளீசுர தேவனே- 38

மறைப்பனவும்

வெளிப்படுத்துவனவும்

சென்மித்த வருடமும் உண்டான அத்தமுந்
    தீதில்கிர கச்சாரமுந்
  தின்றுவரு ஔடதமு மேலான தேசிகன்
    செப்பிய மகாமந்த்ரமும்
புன்மையவ மானமுந் தானமும் பைம்பொனணி
    புனையுமட வார்கலவியும்
  புகழ்மேவு மானமு மிவைஒன்ப துந்தமது
    புந்திக்கு ளேவைப்பதே
தன்மமென் றுரைசெய்வ ரொன்னார் கருத்தையுந்
    தன்பிணியை யும்பசியையுந
  தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொரு
    தஞ்செவியில் வைப்பதியல்பாம் [வர்
§ அன்மருவு கண்டனே மூன்றுலகு மீன்றஉமை
    அன்பனே யருமைமதவேள்
  அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
    அறப்பளீசுர தேவனே. 39

---

* அரக்கு - சிவப்பு

§ அல்மருவு-இருளைப்போன்ற விஷம்.

தேவர்கள் கால அளவை

சதுரயுக மோரிரண் டாயிரம் பிற்படிற்
சதுமுகற் கொருதினமதாஞ்
சாற்றுமித் தினமொன் றிலேயிந்த்ர பட்டங்கள்
தாமுமீ ரேழ்சென் றிடும்
மதிமலியு மித்தொகையின் அயனுயுள் நூறுபோய்
மாண்டபோ தொருகற்பமாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் றால்நெடிய
மால்தனக் கோர்தினமதாம்
துதிபரவுமித்தொகையி லொருகோடிநெடியமால்
தோன்றியே போய்மறைந்தால்
தோகையோர் பாகனே நீநகைத் தணிமுடி
துளக்கிடுங் காலமென்பார்
அதிகமுள பலதேவர் தேவனே தேவர்கட்
கரசனே யருளை டமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 40

தூய்மை இடமும் தூய்மை செய்வனவும்

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
மறையவர்க் குயர்புனிதமோ
மலரடியி லேபுனிதம் ஒளிகொள்கண் ணுடிக்கு
மாசின்மூற் புறமதனிலே
மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
மிக்கமட மாதருக்கோ
மேனியெல் லாம்புனித மாகும்ஆசௌசமொடு
மேவுவனி தையர்தமக்கும்
தாம்பிரம் அதற்குமிகு வெள்ளிவெண்கலம்அயந்
தங்கம்ஈ யந்தமக்குந்

தருப்புனிதம் வருபெருக் கொடுபுளி சுணஞ்சா
சாருமண் டாதுசாணம் [ம்பல்
ஆப்புனித மிவையென்பர் மாமேரு வில்லியே
அனகனே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 41

அடங்காதவற்றை அடக்கும் உபாயம்

கொடியபொலி எருதையிரு மூக்கிலுங்கயிறென்று
கோத்துவச வீர்த்திகொள்வார்
குவலயந் தனில்மதக் களிறதனை அங்குசங்
கொண்டுவச வீர்த்திகொள்வார்
படியில்விட அரவைமந் திரதந்தி ரத்தினற்
பற்றிவச வீர்த்திகொள்வார்
பாய்பரியை நெடியகடி வாளமது கொடுநடை
பழக்கிவச வீர்த்திகொள்வார்
விடமுடைய துட்டரைச்சோர்பந் துகைக்கொண்டு
வீசிவச வீர்த்திகொள்வார்
மிக்கபெரி யோர்களுங் கோபத்தை யறிவால்
விலக்கிவச வீர்த்திகொள்வார்
அடியவர் துதிக்கவரு செந்தா மரைப்பதத்
தையனே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 42

ஒளியின் உயர்வு

செழுமணிக் கொளியதன் மட்டிலே யதினுமோ
செய்ய * கச் சோதமெனவே

* கச்சோதம் - மின்மினி.

செப்பிடுங் கிருமிக்கு மிச்சமொளி யதனினுந்
தீபத்தி னொளிஅதிகமாம்
பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம்
பகல்வர்த்தி அதிலதிகமாம்
பாரமத் தரப்பினொளி அதிலதிக மதிலுமோ
பனிமதிக் கொளியதிகமாம்
விழைவுதரு பரிதிக்கு மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிகருக்கும்
மிக்கஒளிதிசைதொறும்போய்விளங்கிடுமென்ன
விரகுளோ ருரைசெய்குவார்
அழல்விழிகொ டெரிசெய்து மதனவேள் தனை
அண்ணலே யருமைமதவேள் [வென்ற
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 43

குணம் குற்றமாதல்

வான்மதியை நோக்கிடிற் சோரர்கா மூகருக்கு
மாறுத வல்விடமதாம்
மகிழ்நன் தனைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக் கோவிடமதாம்
மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபேர்க் கதிகவிடமாம்
வித்தியாதி பர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க்கெ லாம்விடமதாம்
ஈனமிகு புன்கவிவ லோர்க்கதிக சபைகாணில்
ஏலாத கொடியவிடமாம்
ஏற்றமில் லாதபடு பாவிகட் கறமென்னில்
எந்நாளு மதிகவிடமாம்
ஆனதவ யோகியர்க ளிதயதா மரையுறையும்
அண்ணலே யருமைமதவேள்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 44

உயர்வு அன்றித் தாழ்வும் சிறக்குமிடம்

வெகுமான மாகிலும் அவமான மாகிலும்
மேன்மையோர் செய்யிலழகாம்
விரகமே யாகினுஞ் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யிலழகாம்
தகுதாழ்வு வாழ்வுவெகு தருமங்க ளைச்செய்து
சாரிலோ பேரழகதாம்
சரீரத்தி லோருன மானமெது வாகிலுஞ்
சமர்செய்து வரிலழகதாம்
நகமேவு மதகரியி லேறினுந் தவறினும்
நாளும்அது ஓரழகதாம்
நாய்மீதி லேறினும் வீழினுங் கண்டபேர்
நகைசெய்தழ கன்றென்பர்காண்
அகமாயு நற்றவர்க் கருள்புரியும் ஐயனே
ஆதியே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 45

நல்வினை செய்தோர்

சரணெனக் காத்தவன் மெய்யினுல் வென்றவன்
தானமீளா யாதுதவினேன்
தந்தைசொல் மருதவன் முன்னவற் கானவன்
தாய்பழி துடைத்தநெடியோன்
வருபிதிர்க்குதவினேன தெய்வமே துணையென்று
மைந்தன்மனை விலைவதைத்தோன்
மாருன தந்தையைத் தமையனைப் பிழைகண்டு
மாய்த்துலகில் மகிமைபெற்ருேன்

கருதரிய சிபி அரிச் சந்திரன் மாபலி
கணிச்சியோன் சுமுத்திரைசுதன்
கருடன் பகீரத னுடன்சிறுத் தொண்டனொடு
கானவன் பிரகலாதன்
அரியவல் விபீஷண னெனுமகா புருடராம்
அத்தனே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 46

தீவினை செய்தோர்

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந் தோன்சிவனை
வைதுதன் தலைபோயினேன்
மற்றொருவர் தாரத்திலிச்சைவைத் துடலெலாம்
மாறாத வடுவாயினேன்
தாயத்தி னோர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திகழ்ந்துமாய்ந்தோன்
தக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினுல்
தந்திவடி வாயலைந்தோன்
மாயனைச் சபைதனில் நிந்தனைசெய்தொளிகொள்
மணிமுடி துணிந்துமாய்ந்தோன் [நவ
வருநகுடன் ஒருதக்கன் அயிராவ தன்குருடன்
மகன்வழுதி சிசுபாலனும்
ஆயும் அறி வாளரொடு தேவர்பணி தாளனே
அவனிபுக ழருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 47

நன்னகர்

வாவிபல கூபமுடன் ஆறருகு சேர்வதாய்
மலைகாத வழியிலுளதாய்

வாழைகமு கொடுதெங்கு பயிராவதாய்ச் செந்
வயல்கள்வாய்க் கால்களுளதாய் [நெல்
காவிகம லங்குவளை சேரேறி யுள்ளதாய்க்
கனவர்த்தகர்கள் மறைவலோர்
காணரிய பலகுடிகள் நிறைவுள்ள தாய்நல்ல
காவல னிருக்கையுளதாய்த்
தேவரா லயமாடல் பாடலணி மாளிகை
சிறக்கவுள தாய்ச்சற்சனர்
சேருமிட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
சீவனமு மேகிடைத்தால்
ஆவலோ டிருத்திடுவ தேசொர்க்க வாசமென்
றறையலாம் அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 48

தீநகர்

ஈனசா திகள்குடி யிருப்பதாய் முள்வேலி
இல்லில்லி னுக்குமுளதாய்
இணைமுலை திறந்துதன் தலைவிரித் திடுமாதர்
எங்குநட மாட்டமுளதாய்க்
கானமொரு பக்கமாய் மலையோர மாய்மூறைக்
காய்ச்சல்கப் பாதஇடமாய்க்
கள்ளர்பய மாய்நெடிய கயிறிட் டிறைக்கின்ற
கற்கேணி நீருண்பதாய்
மானமில் லாக்கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டானதாய்
மாநிலத் தோர்தல மிருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதிலும் அருநரகிலே
ஆனநெடு நாள்கிடந் தமிழ்தலே சுகமாகும்
அமலனே யருமைமதவேள்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 49

முழுக்குநாளும் அதன் பரிகாரமும்

வரும்ஆதி வாரந் தலைக்கெண்ணெ யாகாது
வடிவமிதும் அழகுபோகும்
வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரும் அங்கார
வாரந் தனக்கிடர்வரும்
திருமேவு புதனுக்கு மிகுபுத்தி விந்திடுஞ்
செம்பொ னுக் குயரறிவுபோம்
தேடிய பொருட்சேத மாம்வெள்ளி சனியெண்
செல்வமுண் டாயுளுண்டாம் [ணெய்
பரிகார மூளதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கானசெழுமண்
பச்சறுகு பொன்னவற் காமெருக் குவெள்ளிப்
பார்க்கவற் காகுமெனவே
அரிதா அறிந்தபே ரெண்ணெய்சேர்த் தேமுழுக்
காடுவா ருமைமைந்தவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 50

மருத்துவன்

தாதுப் பரீக்ஷைவரு காலதே சத்தொடு
சரீரலட் சணமறிந்து
தன்வந்தரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தமதுவா கடமறிந்து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடுபஸ்பம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குணவாகடம்

சோதித்து மூலிகா விதநிகண் டுங்கண்டு
துயதை லம்லேகியஞ்
சொல்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயந்
தோற்றியே யமிர்தகரமாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடையனு யுயர்வேதன்
ஆகுமெம தருமம்மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 51

உண்மை உணர் குறி

சோதிடம் பொய்யாது மெய்யெனப தறிவரிய
சூழ்கிரக ணஞ்சாட்சியாம்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
துயமாத் திரைசாட்சியாம்
ஆதியிற செய்ததவ முண்டில்லை யென்பதற்கு
ஆளடிமை யேசாட்சியாம்
அரிதேவ தேவனென் பதையறிய முதனூல்
அரிச்சுவடி யேசாட்சியாம்
நாதனே மாதேவ னென்பதற் கோருத்ர
நமகசம கஞ்சாட்சியாம்
நாயேனை இரட்சிப்ப துன்பாரம் அரிஅயன்
நாளுமர்ச் சனைசெய்சரணத்து
ஆதிநா யகமிக்க வேதநா யகனுன
அண்ணலே யருமைமதவேள்
அனுதின மு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே. 52

பிறவிக்குணம் மாறுமை

கலங்காத சித்தமுஞ் செல்வமும் ஞானமுங்
கல்வியுங் கருணைவிளைவுங்

கருதரிய வடிவமும் போகமுந் த்யாகமுங்
கனரூபம் உளமங்கையும்
அலங்காத வீரமும் பொறுமையுந் தந்திரமும்
ஆண்மையும் அமுதமொழியும்
ஆனஇச் செயலெலாஞ் சனனவா சனையினா
ஆகிவரு மன்றிநிலமேல்
நலஞ்சேருமொருவரைப் பார்த்ததுபெறக்கருதில்
நண்ணுமோ ரவ்ஸ்தாளிதன்
நற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராதுகாண்
அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடும்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவள
அறப்பளீசுர தேவனே. 53

ஊழ் வலி

கடலள வுரைத்திடுவர் அரிபிரமர் உருவமுங்
காணும்படிக் குரைசெய்வார்
காசினியின் அளவுபிர மாணமதுசொல்லுவார்
காயத்தின் நிலைமையறிவார்
விடலரிய சீவநிலை காட்டுவார் மூச்சையும்
விடாமல் தடுத்தடக்கி
மேன்மேலும் யோகசா தனைவிளைப் பாரெட்டி
விண்மீதி னுந்தாவுவார்
தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தியறிவார்
சூழ்வினை வரும்பொழுது சிக்கியுழல் வாரது
துடைக்குஒரு நான்முகற்கும்
அடைவலளனத்தெரிந்தளவில்பலநூல்சொல்லு
அண்ணலே யருமைமதவேள் [ம்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 54

ஒப்புயர்வு இல்லாமை

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக
மேருவுக் கதிகமலையும்
வெண்திரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடுநதியும்
சோதிதரு மாதவர்க் கதிகமாங் காந்தியுஞ்
சூழ்கனற் கதிகசுசியுந்
தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
சுருதிக் குயர்ந்தகலையும்
ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுநுகர்
அன்னதா னந்தனிலுமோர்
அதிகதா னமுமில்லை என்றுபல நூலெலாம்
ஆராய்ந்தபே ருரைசெய்வார்
ஆதவன் பிரமவிண் ணவர்முனிவர் பரவவரும்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 55

வீண் செயல்

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீண்உரை
விரும்புவோ ரவரின்வீணர்
விருந்துகண் டில்லாள் தனக்கஞ்சி ஓடிமறை
விரகிலோ ரவரின்வீணர்
நாட்டந் தருங்கல்வி இல்லோரும் வீணரே
நாடியவர்மேற் கவிசொல்வார்
நானிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நாரைச் சுமக்குமெளியோர்

நேட்டறிவி லாதபெரு வீணரே அவரினுஞ்
சேரொருவ ரத்துமின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணினுந்
திரியுமெளி யேனையாட்கொண்டு
ஆட்டஞ் செயும்பதாம் புயமுடியின்மேல்வைத்த
அமலனே அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 56

உதவி யின்றிக் கெடுவன

மூப்பொருவ ரில்லாத குமரிகுடி வாழ்க்கையும்
மூதரண் இலாதநகரும்
மொழியுமவெகுநாயகஞ் சேரிடமும் வருமெது
மோனையில் லாதகவியும் [கை
காப்பமை விலாததோர் நந்தவன மும்நல்ல
கரையிலா நிறைஏரியுங்
சசடறக் கற்காத வித்தையும் உபதேச
காரண னிலாததெளிவும்
கோப்புள விநோதமுடை யோகருகு புகழாத
கோதையர்செய் கூத்தாட்டமும்
குளிர்புனல் நிறைந்துவரும் ஆற்றோரம் அதில்
கோடியர்ந் தோங்குதருவும் [நின்று
ஆப்பதில் லாததே ரிவையெலா மொன்றுக்கும்
ஐயனே அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 57

இவையே போதுமெனல்

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்தோர்
பூவலஞ் செயவேண்டுமோ

பொல்லாத கொலைகளை விலாத நல்நெறியுளோர்
புகழறஞ் செயவேண்டுமோ
நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செயவேண்டுமோ
நன்மனே சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந் திடவேண்டுமோ
மெய்யா நின் அடியரைப் பரவுவோ ருன்பதம்
விரும்பிவழி படவேண்டுமோ
வேதியர் தமைப்பூசை பண்ணுவோர் வானவ
வேண்டியர்ச் சனைசெய்வரோ [ரை
ஐயா ருடன்கமலை சோணு சலந்தில்லை
அதிபனே யருமைமதவேள்
அனுதின மு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 58

அரியராவோர்

பதின்மரில் ஒருத்தர்சபை மெச்சிடப் பேசுவோர்
பாடுவோர் நூற்றிலொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்ர சங்கமிடுவோர்
இதனருமை யறிகுவோர் பதினுயி ரத்தொருவர்
இதையறிந் திதயமகிழ்வால்
ஈகின்ற பேர்புவியி லேஅருமை யாகவே
இலட்சத்தி லேயொருவராம்
துதிபெருக வருமூன்று காலமும் அறிந்தமெய்த்
தூயர்கோ டியிலொருவராம்
தொல்லுலகு புகழ்காசி ஏகாம் பரங்கைலை
சூழும அவி னசிபேரூர்
அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
அத்தனே யருமைமதவேள்

அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 59

கற்பு மேம்பாடு

தன்கணவன் உருவமாய்த் தற்புணர வந்தோன்
தனக்கிணங் காதநிறையாள்
தழற்கதி ரெழாமலும் பொழுதுவிடி யாமலுஞ்
சாபங் கொடுத்தசெயலாள்
மன்னிவளர் அழல்மூழ்கி உலகறிய வேதனது
மகிழ்தனைச் சேர்ந்தபரிவாள்
மைந்தனைச் சுடவந்த இறைவன் தடிந்தவடி
வாள்மாலை யானகனிவாள்
நல்நதி படிந்திடுவ தென்னவார் அழல்மூழ்கி
நாயகனை மேவுதயவாள்
நானிலம் புகழ்சாலி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல்வைதேகி
அன்னமென வருசந்த்ர மதிதுரோ பதையென்
ஆதியே யருமைமதவேள் [போர்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 60

கோடி உடுக்கும் நாள்

கறைபடா தொளிசேரும் ஆதிவா ரந்தனில்
கட்டலாம் புதியசீலை
கலைமதிக் காகாது பலகாலு மழையினிற்
கடிதுநனை வுற்றொழிதரும்
குறைபடா திடர்வரும் வீரியம் போமரிய
குருதிவா ரந்தனக்குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம்புத்தியிற்
குருவார மதிலணிந்தால்

மறைபடா தழகுண்டு மேன்மேலு நல்லாடை
வருமினிய சுக்கிரற்கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோ மரணமுண்டாம்
அறைகின்ற வேதாகமத்தின்வடி வாய்விளங்கு
அமலனே அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 61

சகுனம்

சொல்லரிய கருடன்வா னரம்அரவம் மூஞ்சூறு
சூகரங் கீரிகலைமான்
துய்யபா ரத்வாசம் அட்டைஎலி புன்கூகை
சொற்பெருக மருவும்ஆந்தை
வெல்லரிய கரடிகாட் டான்பூனை புலிமேல்
விளங்குமிரு நாஉடும்பு
மிகஉரைசெ யிவையெலாம் வலமிருந்திடமாகி
வெற்றியுண் டதிகநலமாம் [ல்
ஒல்லையின் வழிப்பயண மாகுவர் தலைதாக்கல்
ஒருதுடை யிருத்தல்பற்றல்
ஒருதும்மல் ஆணையிடல் இருமல்போ கேலெ
உபசுருதி சொல்லிவையெலாம் [ன்ன
அல்லல்தரும் நல்லஅல வென்பர்மூதி யோர்பர
அமலனே யருமைமதவேள் [வும்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 62

இதுவுமது

நரிமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகாக்கை
நாவிசிச் சிலிஒந்திதான்

நரையான் கடுத்தவாய்ச் செம்போத் துடன்மேதி
நாடரிய சுரபிமறையோர்
வரிஉழுவை முயலிவை அனைத் தும்வல மாயிடில்
வழிப்பயண மாகைநன்றும்
மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல்வா வாவென்றிடல்
தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை ஒலிவல்வேட்டுத்
தனிமணி முழக்கெழுதல் இவையெலாம் ஊர்
தனக்கேக நன்மையென்பார் [வழி
அருணகிர ணோதயத் தருணபா னுவையனைய
அண்ணலே அருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 63

இதுவுமது

தலைவிரித் தெதிர்வருதல் ஒற்றைப் பிராமணன்
தவசிசன் னுசிதட்டான்
தனமிலா வெறுமார்பி மூக்கறைபுல் விறகுதலை
தட்டைமுடி மொட்டைத்தலை
கலன்கழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான்
கதித்ததில தைலமிவைகள்
காணஎதிர் வரவொணு நீர்க்குடம் எருக்கூடை
கனிபுலா லுபயமறையோர்
நலமிகு சுமங்கலை கிழங்குதகு தகமங்கை
நாளும்வண் ணான் அழுக்கும்
நசைபெருகுபாற்கலசம் மணிவளையல்மலரிவை
நாடியெதிர் வரநன்மையாம் [கள்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய் பரசணி
அண்ணலே யருமைமதவேள் [யும்

அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 64

உணவில் விலக்கு

கைவிலக் குக்கொளும் பாலுசப் பால்வரும்
காராக் கறந்தவெண்பால்
காளான் முருங்கைதுரை கொம்மடிபழஞ்சோறு
காந்திக் கரிந்தசோறு
செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல்லம் * மலாவகம்
சீரிலா வெள்ளுள்ளி ஈருள்ளி § இங்குவொடு
சிறப்பில்வெண் கத்திரிக்காய்
எவ்வமில் சிவன்கோயில் நிர்மாலி யங்கிரணம்
இலகுசுட ரில்லாதவன்னம்
இவையெலாஞ் சீலமுடையோர்களுக் காகா
எனப்பழைய நூலுரைசெயும்
ஐவகைப்புலன்வென்ற முனிவர் விண்ணவர்போற்றும்
அமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 65

நற்பொருளிற் குற்றம்

போரான கங்கா நதிக்கும் அதன் மேல்வரும்
$ பேனமே தோஷமாகும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷமாகும்
சீராந் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷமாகும்

---

* மலாவகம்-பிண்ணாக்கு.

§ இங்கு-பெருங்காயம். $ பேனம்-நுரை.

திதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்தவர் மேல்தோஷமாம்
தாராள மாமிகத் தந்துளோர் தாராமை
தானிரப் போர்தோஷமாம்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
* தாலஞ்செய் தோஷமாகும்
ஆராயு மொருநான் மறைக்குமெட் டாதொளிரும்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே- 66

மனை கோலுவதற்கு மாதம்

சித்திரைத் திங்கள்தனில் மனைகோல மனைபுகச்
செல்வமுண் டதினுநலமே
சேரும்வை காசிக்கு மேனுள் அரன்புரந்
தீயிட்ட தானியாகா
வெற்றிகொள் இராகவன் தேவிசிறை சேர்கடகம்
வீறல்ல ஆவணிசுகம்
மேவிடுங் கன்னிஇர ணியன்மாண்ட தாகாது
மேன்மையுண் டைப்பசிக்கே
உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியில்
ஓங்குபா ரதம்வந்தநாள்
உயர்வுண்டு மகரத்தில் மாசிமா தத்தில்விடம்
உம்பர்கோன் உண்டதாகாது
அத்தநீ மாரனை எரித்தபங் குனிதானும்
ஆகுமோ அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 67

* தாலம் - நா.

விருந்து வாரம்

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொரு
செய்யொணு துண்ணுது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந்தருந்தார்
பொங்குபுதன் நன்மையுண் டுறவாம்விருந் துணப்
பொன்னவற் கதிகபகையாம்
புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்ப்
போனஉற வுந்திரும்பும்
மங்குல்நிகர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்தஇடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்தநா ளென்றறியலாம்
அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே
அண்ணலே அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 68

பூப்பு வாரம்

அருக்கனுக் கதிரோகி யாவாள் நற் சோமனுக்
கான கற் புடையளாவாள்
அங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
அளவில்பைங் குழவிபெறுவாள்
திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்திஞெடு
சிறுவரைப் பெற்றெடுப்பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாந்
திருவுமுண் டாயிருப்பாள்
கருத்தழிந் தெழில்குன்றி வறுமைகொண் டலைகு
காரிவா ரத்திலாகில் [வாள்

களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல னென்றுரைசெய்வார்
அருத்தியுடனெளியேனை யாட்கொண்டசோதியே
அண்ணலே யருண்மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 69

பூப்பு லக்கினம்

வறுமைதப் பாதுவரு மேடத்தில் இடபத்தில்
மாறாது விபசாரியாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னம்கடகம்
வலிதினிற் பிறரையணைவாள்
சிறுமைசெயு மிடிசேர்வள் மிருகேந்திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னியென்னில்
செட்டுடையள் துலையெனிற் பிணியால்மெலிந்
தேளினுக் குத்தனுசெனில் [திடுவள்
நெறிசிதைவள் பூருவத் தபரநெறி யுடையளாம்
நீள்மகர மானமிவளாம்
நிறைபோகவதிகும்பமேனில்மீனமென்னிலோ
நெடியபே றறிவுடையளாம்
அறிவாளர் மடமாதர் தமையறியு ராசிபலன்
அதுவென்ப ரருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 70

தீவும் கடலும்

நாவலந் தீவினைச் சூழ்கருங் கடலளவு
லட்சம்யோசனை யிதனையே
நாடொறுஞ் சூழ்வதில் லந்தீ வதைச்சூழ்தல்
நற்கழைச் சாற்றின்கடல்

மேவுமிது சூழ்வது குசத்தீவதைச்சூழ்தல்
மிகுமதுக் கடலதனையே
விழைவொடுஞ்சூழ்தல்கிரவுஞ்சதீவம்மிதனின்
மேற்சூழ்தல் நெய்க்கடலதாம்
பூவிலிது சூழ்தல்சாகத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற்கடல்
போதஅது சூழ்தல்சான்மலிதீவ மாந்தயிர்ப்
புணரியப் பாலுமப்பால்
ஆவலூறு புட்கரத் தீவாமிதைச் சூழ்வது
அரும்புனற் றருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 71

மேலான பொருள்

சுழிசுத்த மாயிருந் ததிலும் புடைக்கான
துரகமோர் மாணிக்கமாம்
சூழ்புவிக் கரசனு யதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்கமாம்
பழுதற்ற அதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்கமாம்
பலகலைகள் கற்றறி அடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்கமாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே தியாகியாம்
உசிதனோர் மாணிக்கமாம்
உத்தம குலத்துதித் ததிலுமோமெய்ஞ்ஞானம்
உடையனோர் மாணிக்கமாம்
அழிவற்ற வேதாகமத்தின்வடி வாய்விளங்கு
அமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 72

உண்டி இலையும் முறையும்

வாழையிலை புன்னைபுர சுடன் நல் குருக்கத்தி
மாப்பலாத் தெங்குபன்னீர்
மாசிலமு துண்ணலாம் உண்ணாத வோர் அரசு
வனசஞ் செழும்பாடலாம்
தாழையிலை அத்தி ஆல் ஏரண்ட பத்திரஞ்
சகதேவ மூள்முருக்குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொணாதால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பல அருந்தல்
சற்றுண்டல் மெத்தவுண் இத்தனையு மெய்ப்பணி
தனக்கிட மெனப்பருகிடார் [ணி
ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலகன்
ஆகுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 73

கவிஞர் வறுமை

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
இணையிலாச் சேடனென்றும்
ஈவதில் லாதகன லோபியைச் சபையதனில்
இணையிலாக் கர்ணனென்றும்
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
அதிவடிவ மாரனென்றும்
ஆயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
ஆண்மைமிகு விஜயனென்றும்
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழி அரிச் சந்த்ரனென்றும்

முதுலகி லிவ்வண்ணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்பதென்னே
அழலென உதித்துவரு விடமுண்ட கண்டனே
அமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 74

கவிஞன்

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை திறந்ததெனவே
செப்புமுத்தமிழொடு நாற்கவிதைநாற்பொரு
தெரிந்துரைசெய் திறமையுடனே [ள்
விள்ளரிய காவியத் துட்பொருள் அலங்காரம்
விரிவிலக் கணவிகற்பம்
வேறுமுளதென் னூல் வழக்கமுல கத்தியல்பும்
மிக்கப்ர பந்தவண்மை
உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
ஒத்ததிக சபைகண்டபோது
ஓங்கலை யொலிக்கின்ற கடல்போற் ப்ரசங்கமது
உரைப்பவன் கவிஞனாகும்
அள்ளிவிட முண்டகனி வாயனே நேயனே
அமலனே யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 75

நற்சார்பு

காணரிய பெரியோர்கள் தெரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய்புண்ணியம்
கருணையா யவர்சொன்மொழி கேட்டிடலபிப்ப
காதுசெய் திடுபுண்ணியம் [திரு

பேணி அவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய்புண்ணியம்
பிழையாமலவர்சமைத் தொழுதிடலபிப்பதுகை
பெரிதுசெய் திடுபுண்ணியம்
வீண்நெறி செலாமலவர் பணிவிடை லபிப்பதே
மேனிசெய் திடுபுண்ணியம்
விழைவொடவர்சொற்படி நடந்திடலபிப்பதே
மிக்கபூ ருவபுண்ணியம்
ஆணவ மெனுங்களை களைந்தறி வினைத்தந்த
அண்ணலே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 76

பிறந்த நாளோடு வருகிற வாரபலன்

சென்ம நக்ஷத்திரத் தாதிவா ரம்வரில்
தீரா அலைச்சலுண்டாம்
திங்களுக் காகில்வெகு சுகபோ சனத்தினொடு
திருமாதின் அருளுமுண்டாம்
வன்மைதரும் அங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாராது சுகமதென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தி
வாரத் துடன்கூடினல்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மையுட னேவந்திடும
நாரியருடன்போக மிகவுமுண் டொருவெள்ளி
நல்லவா ரத்தில்வநதால்
அல்மருவு பீடையுண் டாமென்பர் சனியனுக்கு
அமலனே யருமைமதவேள்
அநுதின மு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 77

10223

இதனை உடையவர்க்கு இது இல்லை யெனல்
பொன்னாசை உள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ளபேர்க்குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
பொதுமாதர் விழிவலையிலே
எந்நாளும் அலைபவர்க் கச்சமொடு வெட்கமேது
என்றென்றும் உறுகல்விமேல்
இச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
எளிதா யிருந்துகொண்டே
பலநாளும் அலைபவர்க் கிகழேது புகழேது
பாரிலொரு வர்க்கதிகமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்நிறைய மொன்றுளதுகாண்
* அல்நாண வருகரி உரித்தணியு மெய்பனே
அமலனே யருமைமத வேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 78

மழைநாள் குறிப்பு
சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேல்நல்ல
சீரான பரணிமழையும்
தீதில்வை காசியிற் பூரணை கழிந்தபின்
சேருநா லாநாளினில்
ஒத்துவரு மழையுமவ் ஆனியில் தேய்பிறையில்
ஓங்கும் ஏகாதசியினில்
ஒளிர்பரிதிவீழ்பொழுதில் மந்தாரமும் மழையும்
உண்டா யிருந்தாடியில்
பத்திவரு தேதிஐந தினில்ஆதி வாரமும்
பகரும் ஆவணிமூலநாள்

* அல் + நாண — அண்ணன.

10-16 MAY A

பரிதியு மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவுமுண்டாம்
அத்தனே பைங்குவளை மாலையணி மார்பனும்
அண்ணலெம தருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 79

இருந்தும் உதவாமை

சமயத்தில் உதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழுதி லாதகிளையேன்
சபைமுகத் துதவாத கல்வியேன் எதிரிவரு
சமரத்து இலாதபடையேன்
விமலனுக் குதவாத பூசையேன் நாளும்இருள்
வேளைக்கி லாதசுடரேன்
வெம்பசிக் குதவாத அன்னமேன் நீடுகுளிர்
வேளைக்கி லாதகலையேன்
தமதுதளர் வேளைக்கி லாதஓர் மனைவியேன்
சரசத்தி லாதநகையேன்
சாமரண காலத்தில் உதவாத புதல்வனேன்
தரணிமீ தென்பர்கண்டாய்
அமரர்க்கு முனிவர்க்கும் ஒருவர்க்கும் எட்டாத
ஆதியே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 80

மறையோர் சிறப்பு

ஓர்ஆறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
ஒன்றுதப் பாதுபுரிவார்
உதயாதி யிற்சென்று நீர்படிகு வார்காலம்
ஒருமூன்றி னுக்குமறவாது

ஆராய்ந்து காயத்ரி அது செபிப் பார் நாளும்
அதிதிபூ சைகள்பண் ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோபம்
இன்றியே செய்துவருவார்
பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்குமறையோர்
பெய்யெனப் பெய்யுமுகில் அவர்மகிமை யெவர்
பேசுதற் கரிதரிதுகாண் [களும்
ஆரார் நெடுஞ்சடில அமலனே எனையாளும்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 81

அரசர் சிறப்பு

மநுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட
வரும்அதிக ரணவீரமும்
வாள்விஜய மொடுசரச சாதன விசேஷமும்
வாசிமத கரியேற்றமும்
கனமாம் அமைச்சரும் பலமான துர்க்கமுங்
கைகண்ட போர்ப்படைஞருங்
கஜரத பதாதியுந் துரகப்ர வாகமுங்
காலதே சங்களைவையும்
இனிதா யறிந்ததா னுபதிக ளொடுசேயர்க்
கிளையாத தளகர்த்தரும்
என்றும்வற் றாததன தானிய சமுத்திரமும்
எற்றமுள குடிவர்க்கமும்
அனைவோரு மெச்சஇங் கிவையெலாம் உடைய
அரசராம் அருமைமதவேள் [பேர்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 82

வைசியர் சிறப்பு

நீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவர்
நெடிதுதூ ரந்திரிந்து
நினைவுதடுமாறுரர்கள் சலியார்கள் பொருள்தேடி
நீள்நிலத் தரசுபுரியும்
வாள்உழவ ரைத்தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வாராத இடமும்
மனதையு மறிந்துதவி ஒன்றுநூ றுயிட
வளர்ப்பர்வரு துலைதுலைக்கும்
ஆள்விடுவர் மலிவுகுறை வறுவிசா ரித்திடுவர்
அளவில் பற்பலசரக்கும்
அமைவுறக் கொள்வர்விற் பார்கணக் கதிலணு
அறவிடாற் செலவுவரிலோ [வும்
ஆளியொத் தேமலையின் அளவுங்கொடுத்திடுவர்
அருன்வைசியர் அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 83

வேளாளர் சிறப்பு

யசனுதி கருமமுந் தப்பாமல் வேதியர்
இயற்றிநல் லோர்பெறுவதும்
இராச்யபாரஞ்செய்து முடிமன்னர்வெற்றிகொ
ண்டுநல் லோர்பெறுவதும் [ண்டு
வசனுதி தப்பாது தனதானி யந்தேடி
வசியர்நல் லோர்பெறுவதும்
மற்றுமுள பேரெலாம் மிடியென் றிடாததிக
வளமைபெற் றோர்பெறுவதும்
திசைதோறும் உள்ளபல தேவால யப்பூசை
செய்யநல் லோர்பெறுவதும்

சீர்கொண்டடைங்குவளை மாலைபுனை வோளளர்
செய்யுமே ழிப்பெருமைகாண்
அசையாது வெள்ளிமலை தனில்மேவிவாழ்கின்ற
அண்ணலே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 84

தானாதிபதி மந்திரி சேனாதிபதிகளின் இயல்பு

தன்னரசர் வலுமையும் பரராசர் எண்ணமுஞ்
சாலமேல் வருகருமமும்
தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினோன்
தானாதி பதியாகுவான்
மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும்
வாழ்குடி படைத்திறமையுப்
மந்திரா லோசனையும் எல்லாம் அறிந்தவன்
வளமான மதிமந்திரி
துன்னிய படைக்குணங் கரிபரி பரீக்ஷையே
சூழ்பகைவர் புரிசூழ்ச்சியும்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனாதிபன்
அன்னையிலு நல்லமலை மங்கைபங் காளனே
அனகனே அருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 85

இராயச கருணீகர் சிறப்பு

வருமோலை உத்தரத் தெழுதிவரு பொருளினால்
வரவிடுப் போன்மனதையும்
மருவிவரு கருமமுந் தேசகா லத்தையும்
வருகரத லாமலகமாம்

விரைவா யறிந்தரசர் எண்ணில்எண் ணிலீனை அள
விடவெழுத வாசிக்கவும்
வெற்றிகொண் டேபெரிய புத்தியுடையோன்பு
மேன்மைரா யசகாரனும் [வியில்
கருவா யறிந்துதொகை ஈராறு நொடியினிற்
கடிதேற் றிடக்குறைக்கக்
கடுகைஒரு மலையாக மலையைஒரு கடுகுமாக்
காட்டுவோன் கருணிகனும்
அருவாகி உருவாகி ஒளியாகி வெளியாகும்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 86

கோபத்தின் கொடுமை

கோபமோ பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்
கோபமே ஒன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர்கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே உறவறுக்கும்
கோபமே பழிசெய்யுங் கோபமே பகையாளி
கோபமே கருணைபோக்கும்
கோபமே ஈனமாங் கோபமே எவரையுங்
கூடாம லொருவனுக்கும்
கோபமேமறலிமுன் கொண்டுபோய்த்திய்நரகக்
குழியினிற் றள்ளுமால்
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட் கொண்டரு
அண்ணலே யருமைமதவேள் [ளும்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 87

பல் துறை

தான்புரிதவத்தையுங் கொடையையும் புகழுவோர்
தங்களுக் கவைதழைவுறா
சற்றும் அறி வில்லாமல் அந்தணரை நிந்தனை
தயவிலோ ராயுள்பெருகார் (செய்
மேன்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
வீடுநற் செந்நெல்இவைகள்
வேறொருவர் தந்திடினு மநுமொழி அறிந்த
விலைகொடுத் தேகொள்ளுவார் [பேர்
தேன்கனி கிழங்குவிற கிலையிவை அனைத்தையுந்
தீண்டரிய நீசரெனினுஞ்
சீர்பெற அளிப்பரேல் இகழா துகைக்கொள்வர்
சீலமுடை யோரென்பரால்
ஆன்கொடி உயர்ந்தஉமை நேசனே ஈசனே
அண்ணலே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசது ரகிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 88

தத்துவத் திரயம்

பூதமோர் ஐந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்தும் இந்திரியமைந்து
பொருவில்கன்மேந்திரியம் ஐந்துமனமாதியாம்
புகலரிய காணநான்கே
ஓதினோர் இவையாத்ம தத்துவ மெனச்சொல்வர்
உயர்கால நியதிகலையோடு
ஓங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென்
உரைசெய்யு மோரேழுமே [று
தீதில்வித் யாதத்வ மென்றிடுவ ரிவையலால்
திகழ்சுத்த வித்தையீசன்

சீர்கொள்சா தாக்கியஞ் சத்திசிவம் ஐந்துமே
சிவதத்துவ மென்றறைகுவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செய்
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 89

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியனவும்

வனசஞ் செழுஞ்சூதம் உடன் அசோ கந்தளவ
மலர் நீலம் இவையைந்துமே
மாரவேள்கணைகளாம் இவைசெயுங்குணமுளரி
மனதில் ஆசையையெழுப்பும்
வினவில்ஒள் சூதமலர் மெய்ப்பசலை யுண்டாக்கும்
மிகஅசோ கந்துயர்செயும்
வீழ்த்திடுங்குளிர்முல்லை நீலம்உயிர்போக்கிவிடும்
மேவுமிவை செயுமவத்தை
நினைவிலது வேநோக்கம் வேறொன்றி லாசையற
நெட்டுயிர்ப் பொடுபிதற்றல்
நெஞ்சந்திடுக்கிடுதல் அனம்வெறுத்திடல்காய்
நேர்தல்மௌ னம்புரிகுதல் [ச்சல்
அனையஉயி ருண்டில்லை யென்னவீ ரைந்துமாம்
அத்தனே அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 90

மன்மதன் உபகரணங்கள்

வெஞ்சிலை செழுங்கழைவில் நாரிகரு வண்டினம்
மேல்விடுங் கணைகள் அலராம்
வீசிடுந் தென்றல்சேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங்கெ டாதஇருளாம்

வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாள்நெ
வண்மைபெறு கடல்முரசமாம் [டிய
மகரம் பதாகைவரு கோகிலங் காகளம்
மனதே பெரும்போர்க்களம்
சஞ்சரிக இசைபாடல் குமுதநேயன் கவிகை
சார்இரதி யேமனைவியாம்
தறுகண்மட மாதரிள முலைமதுட மாம் அல்குல்
தவரு திருக்குமிடமாம்
அஞ்சுகணைமாரவேட்கென்பரெளியோர்க்கெலாம்
அமுதமே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 91

பகைகொளத் தகாதவர்

மன்னவர் அமைச்சர் துர்ச்சனர்கோளர் தூதரொடு
மாருத மர்மமுடையோர்
வலுவர்கரு ணீகர்மிரு பாகஞ்செய் தன்னமிடு
மடையர்மந் திரவாதியர்
சொன்னமுடை யோர்புலையர் உபதேசம் அதுசெ
சூழ்வயித் தியர்கவிதைகள் [ய்வோர்
சொற்றிடும் புலவரிவர் பதினைந்து பேரொடுஞ்
சொற்பனந் தனிலாகிலும்
நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
நானிலத் தென்பர்கண்டாய்
நாரியோர் பாகனே வேதாக மம்பரவு
நம்பனே அன்பர் நிதியே
அன்னவூர் பிரமனுங் கண்ணனுங் காணாத
அண்ணலே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 92

இதாகிதஞ் செய்து பயன் கொள்வன

சுவைசேர் கரும்பை வெண்பாலைப் பருத்தியைச்
சொல்லுநல் நெல்லையெள்ளைத்
தூயதெங் கின்கனியை எண்ணுக துட்டரைத்
தொண்டரைத் தொழுதொழும்பை
நவைதிரு மாறுகண் டித்தே பயன்கொள்பவர்
நற்றமிழ்க் கவிவாணரை
நலமிக்க செழுமலரை ஓவிய மெனத்தக்க
நயமுள்ள நாரியர்தமைப்
புவிமீதி லுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீர ரைத்தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்ய மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர்கண்டாய்
அவமதிதவிர்த்தென்னை யாட்கொண்டவள்ளலே
அண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே- 93

தருமம்

பெறுமில்பெறு வித்தலொடு காதோலை நாடொ
பிள்ளைக ளருந்திடும்பால் [றும்
பேசரிய சத்திரம் மடம்ஆ உரிஞ்சுகல்
பெண்போக நாவிதன்வண்ணான்
மறைமொழிகணுடி தண் ணீர்தலைக்கெண்ணெய்ப
வாயினுறை பிணமடக்கல் [சு
வாவியிறும் உயிர்மீட்டல் தின்பொரு ளடைக்
வழங்கல்சுண் ணம்புதவுதல் [காய்
சிறையுறுப வர்க்கமுது வேற்றிலங் காத்தல்பொ
செய்தல்முன் னூலின்மணந் [ழில்

திகழ்விலங் கூண்பிச்சை அறுசமய ருக்குண்டி
தேவரா லயமவுஷதம்
அறைநல்கற் போர்க்கன்னம் தாலெட் டறங்களு
அன்னைசெய லருமைமதவேள் [மூன்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 94

இல்லறம்

தந்தைதாய் சற்குருவை இட்டதெய் வங்களைச்
சன்மார்க்கம் உளமனைவியைத்
தவறாத சுற்றத்தை ஏவாத மக்களைத்
தனைநம்பி வருவோர்களைச்
சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்
தென்புலத் தோர்வறிஞரைத் [களைத்
திதிலா அதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர்தமைச்
சந்ததஞ் செய்கடனை என்றுமிவை பிழையாது
தான்புரிந் திடவில்லறம்
சாறுநல முடையதாந் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியாயிடார்
அந்தரி உயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட்கு
அன்பனே யருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 95

புராணம்

தலைமைசேர்பௌடிகம் இலிங்கமாக்கண்டம்எழி
சாரும்வா மனம்மச்சமே [ல்
சைவம் பெருங்கூர்மம் வருவரா கங்காந்த
சரிதமே பிரமாண்டமும்

நிலைமைசே ரிப்பத்தும் உயர்சிவ புராணமாம்
நெடியமால் கதைவைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடியபுராண நான்காம்
கலைவலர்சொல் பதுமமொடு பிரமகை வர்த்தமே
கமலாலயன் காதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணமாம்
கனல்காதை ஆக்கினேயம்
அலைகொண்ட நதியும்வெண் மதியும்அறு கும்பு
அத்தனே யருமைமதவேள் [னையும்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 96

புகழ்ச்சி

பருகாத அமுதொருவர் பண்ணாத பூஷணம்
பாரில்மறை யாதநிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கேருகம்
கருகாத புயல்கலைகள் அருகாத திங்கள்வெங்
கானிலுறை யாதசீயம்
கருதரிய இக்குண மனைத்துமுண் டானபேர்
காசினியில் அருமையாகும்
தெரியஉரைசெய்யின்மொழி கீர்த்திவருகல்வியொ
சீரிதயம் ஈகைவதனம் (டு
திடமான வீரமிவை என்றறிகு வார்களிச்
செகமேலாங் கொண்டாடவே
அருள்கற்ப தருவென்ன ஓங்கிடுந் தானதுரை
ஆகுமெம தருமைமதவேள்
அநுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 97

திருமால் அவதாரம்

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தருமச்சமாம்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டிமா நிலமெடுத்தே
போம்இரணி யாக்கதனை உயிருண்ட ஏனமாம்
பொல்லாத கனகனுயிரைப்
போக்கியது நரசிங்கம் உலகளந் தோங்கியது
புனிதவா மனமூர்த்தியாம்
ஏழுறும் இராவணனை வென்றவன் இராகவன்
இரவிகுலம் வேரறுத்தோன்
ஏர்பரசி ராமன்வரு கண்ணனொடு பலராமன்
இப்புவி பயந்தவிர்த்தோர்
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்தும்
அரிவடிவம் அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. 98

சிவமூர்த்தி

பிறைசூடி உமைநேசன் விடையூர்தி நடமிடும்
பெரியனுயர் வதுவைவடிவன்
பிச்சாட னன்காம தகனன்மற லியைவென்ற
பெம்மான் புரந்தகித்தோன்
மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வௌவினோன் வீரேசுரன்
மருவுநரசிங்கத்தை வென்றஅரன் உமைபாகன்
வனசரன் கங்காளனே
விறல்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்கசக் கரமுதவினோன்

10223

விநாயகர்க் கருள்செய்தோன் குகனுமை யுடன்
　　மிளிரேக பாதன்சுகன் (கூடி
அறிவரிய தக்ஷிண மூர்த்தியொ டிலிங்கமாம்
　　ஐயனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
　　அறப்பளீசுர தேவனே. 99

0,16M AV,A N52

கவி வணக்கம்

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
　　மருக்கொழுந் துயர்கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரஞ் சிலசூடி
　　மணிமுடி தனிற்பொறுத்தே
சிலரெருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
　　செம்முள்ளி மலர்சூடவே
சித்தம்வைத் திடவுயங் கீகரித் திடுமகா
　　தேவதே வாதெரிந்தே
கலைவல ருரைக்குநன் கவியொடு அம்பலவாண
　　கவிராய னுகுமென்புன்
கவியையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
　　கடனாகும் அடல்நாகமும்
அலைபெருகு கங்கையுஞ் செழுமதிய மும்புனையும்
　　அமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
　　அறப்பளீசுர தேவனே. 100

அறப்பளீசுரசதகம் முற்றிற்று.

பதிப்பாளர்:— அமரம்பேடு குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாச அச்சகம்
நெ. 24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

மாணவர்களுக்குரிய

தெய்வமகள் பதிப்பின்

புத்தக விளம்பரம்

பதிப்புரிமை பெற்றது		அ.	ப
தெய்வமகள் பெரிய அரிச்சுவடி		2	0
,, பாலபாடம்		4	0
,, கெட்டி எண்சுவடி		4	0
,, எண்சுவடி வாய்ப்பாடு		4	0
,, பெருக்கல் வாய்ப்பாடு		1	0
ஆத்திசூடி - மூலமும் உரையும்		2	0
கொன்றைவேந்தன்	,,	2	0
வாக்குண்டாம்	,,	2	0
உலகநீதி	,,	2	0
வெற்றிவேற்கை	,,	3	0
நல்வழி	,,	3	0
நன்னெறி	,,	4	0
விவேக சிந்தாமணி	,,	8	0
அருணகிரியந்தாதி	,,	6	0
சேந்தன் திவாகரம்		4	0
அறப்பளீசுரசதகம்		6	0
கைலாசநாதர்சதகம்		6	0
தண்டலையார்சதகம்		6	0
குமரேசசதகம்		6	0
வடவேங்கட நாராயணசதகம்		6	0
பார்த்தசாரதி மாலை		3	0

அ. குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாசம் பிரஸ்,
நெ. 24. தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை-1.